# பதவி வெற்றிடங்கள்

## தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை
## (நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு)

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையில் நிலவுகின்ற பின்வரும் பதவி வெற்றிடத்தினை நிரப்புவதற்காக தகுதியுடையவர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பப்படிவங்கள் கோரப்படுகின்றன.

## "மின்னியல் நிபுணர்"
**(Electrician)**

| | | |
|---|---|---|
| தேவையான தகைமைகள் | : | மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப/ தொழிற்கல்வி நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்டுள்ள தேசிய தொழிற் தகைமை மட்டம் 4 க்கு குறையாத (NVQ 04) பதவிக்குரிய செயற்பாடுகளுக்குரிய திறமை சான்றிதழைப் பெற்றிருத்தல். |
| சம்பளம் | : | 72,078/- + அனுமதிக்கப்பட்டுள்ள கொடுப்பனவுகள் |
| சம்பளத் தொகுதி | : | PL 3 |
| தெரிவு செய்யும் முறை | : | நேர்முகப் பரீட்சையின் மூலம் |
| வயதெல்லை | : | விண்ணப்ப முடிவுத் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். |

கவனத்திற்குரியது: இப்பதவிக்குரிய பதவி வெற்றிடங்கள் காணப்படுவது மேல், தெற்கு, வடக்கு, வட மத்திய, கிழக்கு, வடமேல் போன்ற மாகாணங்களிலாகும். ஆகவே குறித்த மாகாணங்களில் கடமையாற்றுவதற்கு விருப்பமுள்ள மற்றும் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் சேவை நிலையத்தை மாற்றம் செய்துகொள்வதற்காக முன்வைக்கப்படும் கோரிக்கைகள் யாவும் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

முக்கிய குறிப்பு: உரிய தேசிய தொழில்சார் தகைமை (NVQ) மின்னியல் சார்ந்த துறையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் தனது சுயவிபரத்தை மற்றும் குறித்த விபரங்களை உறுதிப்படுத்துவதற்காக உரிய சான்றிதழ்களின் நிழற் பிரதிகளை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்துடன் பதிவுத் தபாலின் ஊடாக **2024.07.08** ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் மேலதிகப் பொது முகாமையாளர் (மனித வள முகாமைத்துவம்), தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை, த.பெ.இல: 14, காலி வீதி, இரத்மலானை எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். **உரிய சான்றிதழ்களின் நிழற் பிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.** மேலும் விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடவும்.

பொது முகாமையாளர்
தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை.

த.பெ.இல. 14,
காலி வீதி,
இரத்மலானை.